# சங்க கால பெண்பாற் புலவர்களின் கவித்திறம்

முனைவர் ச.ரஞ்சனி,
உதவிப்பேராசிரியர்,
ஆர்.வி.எஸ் கலை அறிவியல் கல்லூரி
சூலூர்,கோவை.641402

ஆய்வுச்சுருக்கம்

பண்டைத்தமிழக சமுதாயத்தில் மகளிர் உயர்ந்த நிலையில் இருந்துள்ளனர் என்பதை சங்க இலக்கியங்கள் வாயிலாக அறியமுடிகின்றது. சங்க காலத்தில் பெண்மை போற்றப்பட்டது. பெண்கள் பண்பாலும்,வாழ்வு நெறியாலும் சிறந்தவர்கள் என்ற குறிப்புகள் இடம் படுகின்றன. சங்ககாலப் பெண்பாற் புலவர் பெருமக்கள் தத்தம் பாடல்களின் வழி வாழ்வியல் சிந்தனைகள், மன்னர்களின் போர்த்திறம்,முதுபெண்டிர் வீரம்,கடமை,மறத்தாயின் பெருமிதம்,நட்பு ,ஈகை என போற்றத்தகும் பண்புகள் இடம்பெற்றிருந்தன என்பதை விளக்குவதாய் இக்கட்டுரை அமைகின்றது.

முன்னுரை

பழந்தமிழ் இலக்கியங்கள் பெண்மையைப் போற்றுகின்றன.பெண்ணை இயற்கையாகவும், இறையாகவும் மதிக்கும் பாங்கு பண்டைத் தமிழர்களிடத்தே காணப்பட்டன.இறைவனையே உமையொரு பாகனாகத் தமிழர் கண்டனர். அறிவுத்திறமும்,ஆன்ற புலமை உரமும் உடையவர்களாய் சங்க கால பெண்பாற் புலவர்கள் திகழ்ந்தனர்.சங்க இலக்கியத்தில் பெண்பாற் புலவர்களின் கவித்திறத்தை விளக்குவதாய் இக் கட்டுரை அமைகின்றது.

புலவர்களின் தனிச்சிறப்புகள்

பெண்பாற்புலவர்கள் பாடிய பாடல்கள் சங்க இலக்கியத்தில் பல பாடல்கள் உள்ளன. அவை மெல்லியல்பு வாய்ந்த பெண்களின் கவி வல்லமையைக் காட்டுவனவாகும். அறம், மறம், தூது, பிரிவு, கடமையுணர்வு என்ற வகையில் புலவர்களின் புலமைத்திறனை அறியமுடிகிறது.

முதல் பெண் தூதுவர்

ஔவையார் சங்க காலப் புலவர்களில் குறிப்பிடத்தக்கவர்.அதியமான் நெடுமானஞ்சியின் அவைக்களத்தில் இடம்பெற்றவர்.போக்குவரத்து வாய்ப்பு இல்லாத காலகட்டங்களிலும் தமிழ்நாடு முழுவதையும் சுற்றித்

தமிழ்மொழியின் பெருமையை நிலைநாட்டியுள்ளார்.அரசியல் ஆலோசகராகவும் , அரச தூதுவராகவும் இருந்துள்ளார்.ஆண் - பெண் நட்பிற்கு இலக்கணமாகவும் திகழ்ந்துள்ளார்.

தூதின் இலக்கணம்

தூது செல்வாருக்குரிய தகுதிகளாக அன்பு அறிவு ஆராய்ந்த சொல்வன்மை என்பன மூன்றாகும் என்று வள்ளுவர் குறிப்பிடுவார். இதற்கு இலக்கணமாய் திகழ்ந்தவர் ஔவைபெருமாட்டியார்.

சொல்வன்மை :

தகடூர் மன்னன் அதியமானுக்கும், காஞ்சி மன்னன் தொண்டைமானுக்கும் இடையே கருத்து வேறுபாடு காரணமாகத் தொண்டைமான் அதியமானின் மீது போர் தொடுக்க விழைந்தான்.ஓயாது போரில் ஈடுபட்டால் மக்கள் துன்புறுவர்.இதனால் உள்நாட்டுக்குழப்பம் , வறுமை ஏற்படும். இதனைத் தவிர்க்க அதியமான் ஔவையைத் தொண்டைமானிடம் தூது அனுப்பினான். தொண்டைமான் ஔவையை அன்புடன் வரவேற்று, உபசரித்துத் தன் படைக்கலன்களைக் காண அழைத்துச் செல்கிறான். படைக்கொட்டிலுக்குச் சென்று பார்வையிட்ட ஔவையார்,

" இவ்வே பீலி அணிந்து ,மாலை சூட்டிக்
கண்திரள் நோன்காழ் திருத்தி,நெய்யணிந்து,
கடியுடை வியன் நகர் அவ்வே; அவ்வே
பகைவர்க் குத்தி கோடுநுதி சிதைந்து ,
கொல்துறைக் குற்றில மாதோ- என்றும்..( புறம் .95 ) என்று பாடிய பாடல் வஞ்சப்புகழ்ச்சிக்கு எடுத்துக்காட்டு ஆகும் . பகைமன்னனின் போர்க்கருவிகளைப் பழிப்பது போலப் புகழ்ந்து, அவை பல போர்முனைகளைக் கண்டதால் நுனி சிதைந்தன எனவும் கூறியுள்ள நயம் பாராட்டத்தக்கதாகும். இரு மன்னர்களுக்கிடையே போர் மூளக்கூடிய நேரத்தில், தூது சென்று போரைத்தடுப்பது என்பது எளிதான செயல் அன்று. அச்செயலைத் தனது சொல்வன்மையால் திறம்படச்செய்து முடித்த பெண்பாற் புலவரான ஔவை பெருமாட்டி போற்றுதலுக்குரிய பெண்மணி ஆவார்.

முதுபெண்டிர் வீரம்

மறக்குடி மங்கை யொருத்தியின் செயலை வியந்து பாடும் பாடல்,
" கெடுக சிந்தை கடிது இவள் துணிவே...
ஒரு மகன் அல்லது இல்லோன்
செருமுகம் நோக்கிச் செல்க என விடுமே " ( புறம் - 279)
மறக்குடிமகளிரின் வீரத்தினை ' மூதின் முல்லை' என்று புறப்பொருள் இலக்கணம் கூறுகின்றது. முன்பு, நேற்று, இன்று எனக் காலவரிசைப்படி குடும்பத்திலிருந்து நாட்டுப்பணியாற்ற தன்னைச் சார்ந்தோரையெல்லாம் முறை முறையே அனுப்பி வைக்கும் வீரத்தாயின் மறவுணர்வு போற்றத்தக்கதாய் உள்ளது.
தாயின் பெருமிதம்

பழந்தமிழர்கள் போரில் புறமுதுகு காட்டுவதை மானக்கேடாகக் கருதினர். அவர்கள் மார்பில் புண்பட்டுப் போர்களத்தில் இறப்பதே புகழைத் தரும் என எண்ணினர்.அக்கால மறக்குடி மகளிரின் வீரம் மிகவும் போற்றத்தக்கதாக அமைந்தது.
நச்செள்ளை என்னும் பெண்பாற் புலவர் பாடிய பாடல்,
மண்டமர்க் குடைந்தனன் ஆநின்,உண்டவென்
முலையறுத்திடுவேன்' ( புறம் 278)

நரம்புகள் தெரியும் படியும் உலர்ந்து வற்றிய தோளையும் கொண்ட தாய் ஒருத்தியிடம் ,அவன் மகன் பகைவரால் புறமுது கிட்டு மாய்ந்தான் என வீரர் சிலர் கூறினர். அது கேட்டு உள்ளம் நைந்தாள். அப்படி ஒரு வேளை , புறப்புண் பெற்று மடிந்திருப்பானேயானால் அவனுக்குப் பாலூட்டிய தனது மார்பகத்தை அறுத்து எறிவேன் எனக் கூறிச் சினந்தாள் அத்தாய். நேரே போர்க்களம் சென்றாள். கையில் வேலுடன் அங்குச் சென்றவள்,மாண்ட உடல்களைப் புரட்டினாள். பிணக்குவியலிடையே தன்மகன் சிதைந்து விழுப்புண் பெற்று வீரமரணம் அடைந்ததைக் கண்டாள். அவள் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை அவனை பெற்ற பொழுது அடைந்த மகிழ்ச்சியை காட்டிலும் வீர மரணம் அடைந்ததைக் கண்டு தாய் உள்ளத்தின் மகிழ்ச்சி இரட்டிப்பாகியது. ஒரு நாடகக் காட்சி போலவே இப்பாடலை அமைத்துள்ளார் புலவர் நச்செள்ளையார்.
தன்மானம் :

அவ்வையார் அதியமானின் நட்பு, பாராட்டுதலுக்கும் போற்றுதலுக்கும் உரியது .ஒருமுறை ஔவையார் அதியமானை காணச் சென்றபோது அரசியல் அலுவலில் மூழ்கிப்போன மன்னன் ஔவைப் பெருந்தகையை காக்க வைத்துள்ளார். நீண்ட காத்திருப்பிற்குப் பிறகும் சந்திக்கவில்லை. சினமுற்ற ஔவையார்,

"காவினெங்கலனே! சுருக்கினெம் கலப்பை!
மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத்து அற்றே
எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே ! ( புறம் 206)

மரத்தைப் பற்றி பயன் கொள்ளும் தச்சர்கள் பெற்ற சிறுவர்கள் , மழுவோடு காட்டுக்குச் சென்றால் மரங்கள் எப்படி அவர்களுக்குப் பயன்படுமோ அது போல் எந்த திசைக்குச் சென்றாலும், அத்திசையெல்லாம் சோறு உண்டு என்ற கருத்துப்படப் பாடினார்.

புலவரின் பண்பாடு

ஔவைப் பெருந்தகையின் அதியமான் எத்தகையதாய் இருந்தாலும் ஏற்றுக் கொள்கிறார் என்பதை விளக்கும் விதமாக, ஐந்து ஆண்டுகள் நிரம்பிய பின்னரும் கூட சில குழந்தைகள் மழலை மொழி பேசும். கேட்பவர் சிரிக்கும் நிலையைத் தாண்டி எரிச்சல் கொள்ளும் நிலையையும் அடைந்து விடுவர். ஆனால் அந்த மழலை மொழியில் பெற்றோர் இன்பம் காண்பார். இம்மனத் தத்துவத்தை நன்கு உணர்ந்து பெற்றவரே பிள்ளை அருமையை அறிவர் என்பதைக் காட்டவே இந்த அழகான கருத்தை உவமையாக வைத்துப் பாடியுள்ளார்.

" யாழொடுங் கொள்ளா பொழுதொடும் புணரா
பொருள் அறிவாரா ஆயினும் தந்தையர்க்கு
அருள் வந்தனவால் புதல்வர் தம் மழலை
என் வாய்ச் சொல்லும் அன்ன
நெடுமான் அஞ்சிநீ அருளன் மாறே " (புறம் .92 )

ஒப்பற்ற கவிதை பாடும் ஔவையார் தம்முடைய கவிதை எவ்வாறு இருப்பினும் ,அதியன் அன்பால் அவற்றை ஏற்றுக்கொள்கிறான் என்று உவமை கூறும் போது அவருடைய அடக்கமும், தற்பெருமையும் ,இனிமையும் நன்கு விளங்குதல் காணலாம். அவர் பயன்படுத்திய உவமை அவருடைய பண்பாட்டை விளக்குமாறு அமைந்துள்ளது.

கடமை உணர்ச்சி

மகளிர் பாடிய பாடல்களுள் பொன்முடியார் என்ற பெண்பாற்புலவர் பாடிய பாடல் தலையாயது .சமுதாய வாழ்வு பெருகப் பெருக மனிதனுடைய கடமைகளும் விரிந்து கொண்டே செல்கின்றன ஒவ்வொருவருக்கும் உரிய கடமைகளை தனது பாடலில் எக்காலத்துக்கும் பொருந்தும் வகையில் பொன்முடியார் பாடியுள்ளார்.

" ஈன்று புறந்தருதல் என்தலைக்கடனே !
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே!
வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே !
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே!
ஒளிறு வாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே !

அரும்பெரும் கருத்துக்களை இக்கால மக்களும் ஏற்றுக்கொள்ளும் வகையில் பாடியுள்ளார்

இளைஞரின் கடமை

காவற்பெண்டு என்னும் பாடிய புறப்பாடலில் மறக்குடி தாயொருத்தி இடம் தலைவி வினவுவது போலவும், அதற்குத் தாய் பதில் அளிப்பது போலவும் பாடியுள்ள கவினுறு பாடல் .

" சிற்றில் நற்றூண் பற்றி நின் மகன்
யாண்டுளனோ ? என வினவுதி ; என்மகன்
யாண்டுளனாயினும் அறியேன்; ஓரும்
புலி சேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிறோ இதுவே;
தோன்றுவன் மாதோ போர்க்களத்தானே " ( புறம் 86 )

இப்பாடலில் மறக்குடி பெண் உள்ளத்தின் மாண்பும், அக்கால இளைஞர் தம் கடமையில் சிறிதும் தவறார் .ஆகவே தாய் தந்தையர் அவர் ஒழுக்கம் குறித்து சிறிதும் கவலை கொள்ளார். மக்களைப் பெற்றுப் பேணி விடுவதே தம் கடன். அதோடு அவருக்கும் தமக்கும் உள்ள உறவு அற்றது. இனி அவர் ,அவர் கடன் ஆற்றச் செல்ல வேண்டும் என்று எதிர்பார்ப்பது இன்றி என்றும் தம் அருகிலேயே இருந்து தமக்கு வேண்டுவன புரிந்து கொண்டிருக்க வேண்டும் என எதிர்பார்ப்பது அறிவுடைமையன்று என்று அக்காலப் பெற்றோர்கள் கருதினர் என்ற உண்மைகளும் தெரியலாகிறது

 ISSN: 2320-4842
Vol-18 No. 03 July-September 2024

அவலச்சுவை

பாரி வள்ளல் கடையெழு வள்ளல்களில் ஒருவராகப் போற்றப்பட்டார். பறம்பு நாட்டை ஆட்சி செய்தவன். பாரியின் நண்பர் கபிலர் . மூவேந்தரின் சூழ்ச்சியால் பாரி கொல்லப்படுகிறான். தந்தையின் மறைவால் வாடிய
பாரி மகளிர்,

" அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில்
எந்தையும் உடையோம் எம் குன்றும் பிறர் கொள்ளார் !
இற்றைத் திங்கள் இவ்வெண்ணிலவில்
வென்று எறி முரசின் வேந்தர் எம்
குன்றும் கொண்டார்!
யாம் எந்தையும் இலமே! (புறம் 112 )

இப்பாடல் எளிய பாடலாக இருப்பினும் தந்தையை இழந்த பெண்மக்கள் மனத்துயரை அவலச்சுவையாக காட்டுகிறது.

சென்ற திங்களில் எங்கள் தந்தையும் இருந்தார். நாடும் இருந்தது. இந்தத் திங்களில் எமது நாடும் இல்லை எம் தந்தையும் எங்களைப் பிரிந்தார். எனத் துயரம் தோன்றக் கூறியுள்ள இப்பாடலில் சோகத்தின் ஊடே இகழ்ச்சியும் தோன்றுமாறு அமைந்துள்ள திறம் நோக்கத்தக்கது.

கைம்பெண்களின் நிலை :

இல்லறத்தின் சிறப்பு கணவனும், மனைவியும் ஒற்றுமையுடன் இல்லறக்கடமைகளை ஆற்ற வேண்டும். விருந்தோம்பலில் தலை சிறந்தவர்கள் தமிழர்கள். கணவனுடன் மகிழ்ச்சியாக தலைவி வாழ்ந்த சூழலில் இருவரும் இணைந்து இரவலர்களுக்கு விருந்தினை வழங்கி மகிழ்வர். அவர்கள் வீட்டு வாயில் குறைவின்றிக் கூடியிருக்கும் சிறப்புடையது. வறுமையால் வாடிக் கண்ணீர் விட்டுக் கலங்கும் பலருடைய கண்ணீரை மாற்றிக் கருணை புரிந்தது அவ்வீட்டின் முன்னே அமைந்த பந்தல். இன்றோ தலைவனின் மறைவிற்குப் பிறகு அவன் மனைவி மங்கலப் பொருட்களை இழந்து பொலிவிழந்து நிற்கிறாள். முன்பு பலர் கண்ணீரை மாற்றியது அவ்வீடு, ஆனால் இப்போது அவள் ஒருத்தியின் கண்ணீரைக் கூட அதனால் மாற்ற முடியவில்லை. வனப்பும் வளமும் பெற்றிருந்த வீடு, அவள் கணவன் இறந்த பின்பு வாழ்வும் ,வளமும் இழந்து , அவளோடு கூடி வாடி வருந்துகிறது என்ற கருத்தமைந்த பாடல்.

" குய்குரல் மலிந்த கொழுந்துவை அடிசில்
இரவலர்த் தடுத்த வாயிற் புரவலர்

கண்ணீர்த் தடுத்த தண்ணறும் பந்தர்.."( புறம்- 250)

வாழ் நகர் ஒன்று வளமிழந்து வறிதான காட்சி தாயங்கண்ணியாரை வாட்டங்கொள்ளச் செய்தது. இதனை அவ்வில்லத் தலைவனின் மனைவி கைம்மையுற்ற நிலையோடு தொடர்புபடுத்திக் கூறியுள்ளமை சோகத்தை மிகுதிப்படுத்துகிறது.

உலக மேன்மை :

ஒரு நாடு சிறப்பதற்கு அந்நாட்டின் மண்வளம் காரணமன்று ; அந்நாட்டு ஆடவரின் - ஆண்மக்களின் நடை நலமே,மன நலமே,ஒழுக்க நலமே காரணமாக அமையும் என்பதை,

" நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
வ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே "

நாடே ,நீ நாடாய் இருந்தாலும்,காடாய் இருந்தாலும் சரி ! எங்கே நல்லவர்கள் வாழ்கிறார்களோ,அங்கே தான் நீ நல்ல நாடென்று கூறப்படுவாய் ! என்பதே இப்பாடலின் கருத்தாகும். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் பாடிய பாடல் எக்காலத்துக்கும் பொருந்தும் வகையில் அரிய கருத்துகளைக் கொண்டுள்ளது.

முடிவுரை

தமிழக மகளிரின் தனிச்சிறப்புக்களை அறிதற்குப் பெருந்துணையாக விளங்கும் பழந்தமிழ் நூல்கள் சங்க இலக்கியங்களாகும். பெண்பாற் புலவர்கள் கல்வியிலும், புலமையிலும் ஆற்றல் பெற்றவர்களாய் விளங்கினர் என்பதை சங்கப்பாடல்களில் இல்லறம்,விருந்தோம்பல் , நட்பு, வீரம் போன்ற பாடல்களில் பெண்பாற் புலவர்களின் கவித்திறனை இக்கட்டுரையின் மூலம் அறியலாகிறது.

துணைநூற் பட்டியல்:

1 தமிழர் நாகரிகமும் தமிழ்மொழி வரலாறும்- தொகுதி 7 -
ௌதொகுப்பாசிரியர் பேராசிரியர் முனைவர் அரங்க .இராமலிங்கம்
2.மகளிர் வளர்த்த தமிழ் - அ.ச.ஞான சம்பந்தன்
3.சங்க கால மகளிர் - டாக்டர் சி.பாலசுப்பிரமணியன்
4.பெண்பாற் புலவர்கள் - புலவர் கா.கோவிந்தன் ) வர்த்தமானன் பதிப்பகம்
5.புறநானூறு ஒரு புதிய பார்வை

ISSN: 2320-4842
Vol-18 No. 03 July-September 2024

- முனைவர் இராம.குருநாதன் - வானதி பதிப்பகம் சென்னை.